
நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)



புகழ்பெருக்கும் நகரத்தார் பொன்னனை குரலுக்குத்
திகழ்புல்வ நாயகியின் திருவடிகள் காப்பாமே.

ஜூலை 1982

எங்களது நல் வாழ்த்துக்கள்!



குவாலிட்டி பேப்பர் மில்ஸ்

பிரைவேட் லிமிடெட்.,

தபால் பை எண்-1,

திருப்புவனம்.

இராமநாதபுரம் மாவட்டம்

போன்: திருப்புவனம்-53

கிராஃப்ட் பேப்பர், புளூமாட்ச்
பேப்பர் தயாரிப்பாளர்கள்

நிர்வாக இயக்குநர்:
S. அரசகேசரி செட்டியார்

சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக இலக்கிய மாத இதழ்)

குரல் 1
ஒலி 6

துந்துபி
ஆனி

ஜூலை
1982

அப்பாவி என்றுமோர்
சொல்லுக் கிலக்கணம்
அவனன்றி யாரு மில்லை
ஆனாலும் இந்நாளில்
அவனையும் மீறவோர்
அறிஞன் பிறக்க வில்லை —கவியரசு கண்ணதாசன்

கௌரவ ஆசிரியர்:

லெ. அழகுசுந்தரம் செட்டியார்

ஆசிரியர்:

வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:

சுப. அ. நடராசன் செட்டியார்

அலுவலகம் :

25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625001.

தொலைபேசி ; p. p. 26668

கன்னியர்கள் வாழ்வுபெற மாலை
காளையர்கள் வாழ்வுயர வேலை

பாகனேரி ஸ்ரீ புல்வாய்நாயகி யம்மை

வெண்பாப் பதிகம்

கவிஞர் இராகவன்முத்து B. Sc., Dip. Geog., CAIIB

உயிருக்குத் தேனுய் உவப்பூட்டும் அம்மா!
பயிருக்கு வான்மழையே! பாலில் — தயிரிருக்கும்
பான்மையிலும் வண்ணப் பசுந்தமிழில் வாழ்பவளே!
கான்மலரைப் புல்வாயே காட்டு.

புல்லை மலராக்கிப் பொய்யரையும் நேராக்கிக்
கல்லை மணியாக்கும் கண்மணியே! — தொல்லை
அறக்களைவாய்! புல்வாய்ப்பேர் அம்மா! அடியேன்
சிறப்புயர ஈவாய் செழிப்பு.

செழித்துச் சுகம்நிறைந்து செம்மாந்து வாழ
அழித்ததிருப் பன்மடங்காய் ஆக்கிக் கொழிக்க,
பழித்தோரும் தாள்போற்றப் பார்வணங்கச் செய்வாய்!
தழைத்தபுகழ்ப் புல்வாயாம் தாய்.

தாய்மை மனத்தில் தமிழ்போல் இனிப்பவளே!
வாய்மை நிலையாக வாழ்ந்திருக்கத் — தூய்மையுரு
வெள்ளாடை வாணியென வீறுயரும் புல்வாயே!
கொள்ளாதே எங்கள் குறை.

குறையிரந்து நின்ருேம்! குதலை உமையே!
மறையிகந்து நின்ருய்! மணக்கும் — கறைமிடற்றின்
நஞ்சை அமுதாக்கும் புல்வாயாம் நாயகியே!
பஞ்சங்கள் போயொழியப் பார்.

போகும் இடமெல்லாம் பொய்யாத் துணையாகி
வாகை வழங்கும் வடிவழகே! — சாகும்
கணத்தினிலும் உன்றன் கழலிணைகள் எண்ணும்
மனத்தைத் தருவாய் மகிழ்ந்து.

தருவாரா என்ருெருவர் தாழ்வாராம் ஏறி
ஒருவாரம் ஏங்கி உருகிப் ... பொருமாதே
இன்பசுகம் எல்லாமும் எண்ணியவா றெய்திவிட
உன்பதத்தின் வான்கருணை ஊற்று.

வானில் முழுநிலவாய் மாதத்தில் முப்பதுநாள்
ஊனில் செறிந்தினிக்கும் ஓவியமே! — தேனில்
இயன்றசுவை மீறும் இனியதமிழ் கேட்டு
நயந்துருகி யீவாய் நலம்.

நலமுதவும் கந்தப்பன் நல்லருள்சேர் முத்தப்பர்
வலமுயரப் பாடி வணங்கத் — தலையசைத்தாய்
வெற்றிசுக வீறளித்தாய்! வேல்விழியே! புல்வாய்ப்பேர்க்
கொற்றவையே! காப்பாய் குடி.

காக்கும் கடமையினைக் கண்ணுல் புரிபவளே!
வாக்கில் நிலைத்தென்றும் வாழ்ந்திடுவாய்! — நோக்கும்
திசையெங்கும் வாழும் திருமகளே! புல்வாய்!
இசையெங்கும் பெற்ருய் எழு.

இடம்பிடித்தேன்! எண்ணம்போல் இன்பசுகத் தேரின்
வடம்பிடித்தேன்! வாழ்க்கை வளமாம் — தடம்பிடித்தேன்!
அன்பில் வசமாம் அருளுருவப் புல்வாயாள்
தன்பெருமைத் தாள்நிழலிற் சேர்ந்து.

நகரத்தார் குரல்

காலத்திற் கேற்ற கல்விப் பணி

கல்லூரி, பள்ளி மாணவ, மாணவியருக்குத் தட்டுப்பாடு எதுவும் இல்லாமல் குறைந்த விலையில் நோட்டுப் புத்தகங்கள் கிடைக்கத் தமிழக அரசு வழி வகை செய்திருக்கிறது. இதன்மூலம் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் மாணவர்கள் நோட்டுப் புத்தகங்களை நிர்ணய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

இலாபத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்ட சில வணிகர்களால் நோட்டுப் புத்தகங்கள் ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் எனவே ஒரு சில மாநிலங்களில் அதனால் தட்டுப்பாடு ஏற்பட்டு மாணவ, மாணவிகள் பெரும் அவதிக்குள்ளாவதாகவும் குறைகள் கூறப்பட்டன.

இலாப நோக்கம் எதுவுமில்லாமல் - கல்விப்பணியின் முக்கியத்தை உணர்ந்து தமிழக அரசு மேற்கொண்டுள்ள இந்தத் திட்டத்தால் நடுத்தர ஏழை மக்கள் பெரிதும் பயனடைகின்றனர். காலத்திற்கேற்ற கல்விப் பணிக்காகத் தமிழக அரசையும் தமிழக முதல்வரையும் பாராட்டுகிறோம்.

'கல்வி சிறந்த தமிழ்நாடு' என்று பாராட்டப் பெற்ற தமிழகத்தில் கல்விப் பணிக்காகச் செய்யப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் மாணவர்களின் தேவைக்கேற்ப நோட்டுப் புத்தகங்கள் கிடைக்கும்படியாகச் செய்யத் தமிழக அரசை வேண்டுகிறோம்.

சேலத்தில் ஒரு இனிய விழா!

சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத் தொடக்க விழா 30-5-82 அன்று சேலம் தமிழ்ச் சங்கக் கட்டிடத்தில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆசியுடன் மதுரை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

மேளதாள வாத்திய இன்னிசையோடு ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் மேற்படி சங்கத்தைத் துவக்கிவைத்து அன்பர்கட்கும், நகரத்தார் பெருமக்களுக்கும், சங்க அங்கத்தினர்களுக்கும் அருளாசி வழங்கினார்கள். சேலம் நகரத்தார் இளைஞர் சங்கம் பெரியவர்கள் ஆசியுடன் தொடங்கப் பெற்றது உண்மையிலேயே கிடைத்தற்கரிய பேராகும். இதுவரையிலும் நகரத்தார் சங்கத்தையோ, இளைஞர் சங்கத்தையோ பெரியவர்கள் துவக்கி வைத்ததில்லை என்கிறபோது உண்மையிலேயே சங்க அங்கத்தினர்கள் பெருமிதம் கொள்வதில் தவறில்லை.

காஞ்சி சுவாமிகள்

சங்கராச்சாரிய சுவாமிகள் தங்களது அருளாசியில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் செய்த தர்மங்களை நினைவுகூர்ந்து இந்திய நாட்டில் அரசர்களுக்கு அடுத்தாற்போல் நாட்டுக்கோட்டை நகரத்தார்களே பெரிய பெரிய தர்மங்கள் செய்துள்ளதையும், கோயில்கள் கட்டியுள்ளதையும், சத்திரங்கள், கலைக்கோயில்கள் ஏற்படுத்தியுள்ளதையும் பெருமையுடன் எடுத்துரைத்தார்கள். அப்பேர்ப்பட்ட சமூகத்தினர் இன்று பொருளாதாரக் குறைவினால், மிகவும் பின்தங்கியிருப்பதை நினைத்து, நகரத்தார் சமூகம் முற்பட்ட சமூகமாகத் திகழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவதாகவும், கூடிய விரைவில் இளைஞர்கள் "விழித்தெழுந்து, நகரத்தார் சமூகத்தை மேம்படுத்தவும் அருளாசி கூறினார்கள்.

சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத் தலைவர் ஆர்எம். நாராயணன் அவர்கள் தமது வரவேற்பில் சங்கம் தோன்றிய காரணங்களையும், மேற்படி சங்கத்தின் சட்ட திட்டங்களையும், சங்கம் செய்யப்போகும் பணிகளையும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். அவர்களுடைய வரவேற்பின் சுருக்கம் வருமாறு :-

"நகரத்தார் சங்கங்கள் பல இருந்தும் அவை சமூக முன்னேற்றத்திற்கு விரைந்து எதையும் செய்யாமல் இருந்ததால் 18 வயது முதல் 45 வயது வரை உள்ள இளைஞர்கள் எவ்வித வேறுபாடுமின்றி ஒன்று சேர்ந்து லையன்ஸ்; ரோட்டரி சங்கங்கள்போல நகரத்தார் இளைஞர்கள்

ஃ ஒழுங்கின்மைக்கு இடம் தருமளவு அது மனிதனைக் கீழ்மையில் ஆழ்த்துகிறது.

வாழும் ஊர்களிலெல்லாம் தொடங்குவது என்று முடிவெடுத்து சேலத்தில் வாழும் இளைஞர்களால் இச்சங்கம் முதலில் தொடங்கப்பட்டது. ஏற்கனவே பற்பல இடங்களிலும், ஊர்களிலும், நாடுகளிலும் உள்ள இளைஞர் சங்கங்களை ஒழுங்குபடுத்தி ஒரு 'காமன் அசோசியேஷன்' ஏற்படுத்துவதற்கு முன்னோடியாகவே இந்தச் சங்கம் தொடங்கப் பட்டது.

''சங்கத்திற்கென்று தனிச்சின்னம், சட்டதிட்டங்கள், குறிக்கோள்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நகரத்தாரின் விருந்தோம்பலையும் அவர்கள் வாழும் வீட்டின் முகப்பு நிலையையும் விளக்குவதற்காகவே நகரத்தார் பெண்கள் வீட்டின் முகப்பில் கைகூப்பி வரவேற்பது போன்ற சின்னத்தை 'ஸ்டிக்கர்' மூலம் எல்லோருடைய கார்களிலும், மற்றும் ஸ்கூட்டர்களிலும், மற்ற வாகனங்களிலும் ஒட்டி விளம்பரம் செய்துள்ளோம்''

''சங்கத்தின் மூலம் அங்கத்தினர்கள் உதவியுடன் ஒவ்வொரு மாதமும் இரண்டு திருமணங்களுக்கு ரூபாய் 2000/- வரையில் நிதி உதவி அளித்து வருகின்றோம். நன்றாகக் கல்வி பயிலுவோருக்கு 'ஸ்காலர்ஷிப்' வழங்கியுள்ளோம். அண்மையில் சேலத்தில் நகரத்தார் இளைஞர் சமூக நலக் கூடம் (*Nagarathar Community Centre*) ஏற்படுத்த சினிமா நடிகர் சோ அவர்களின் நாடகம் நடத்தி சுமார் ரூபாய் ஒரு இலட்சத்துப் பத்தாயிரம் கட்டிட நிதிக்குச் சேர்த்துள்ளது பெருமைப் படவேண்டிய காரணங்களுள் முதன்மையானது. தமிழக அரசு உதவியுடன் காலி மனையிடம் குறைந்த விலையில் வாங்கி வீடுகள் கட்ட ஏற்பாடுகள் செய்து வருகின்றோம். அனேகமாக இரண்டு மூன்று மாதங்களில் பூமி பூஜை செய்யத் தோதாக நிலம்கிடைக்கும் என நம்புகின்றோம். சங்கத்தில் ''திருமண நிதி'' ''கல்வி நிதி'' (*Marriage Endowment, Scholarship Endowment*) என்று இரண்டு நிதிகள் ஏற்படுத்தி சுமார் ரூபாய் 39000/- வரையில் வசூல் செய்துள்ளோம். ரூபாய் 10000/- கொடுத்தால் டெபாசிட் செய்து, இதிலிருந்து வரும் வட்டியை ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு பெண்ணின் திருமணச் செலவிற்கு, நிதி உதவி செய்தவர்கள் பெயரில் வழங்குவது என்றும், ரு 5000/- வழங்கினால் நிதி உதவி அளித்தவர்கள் பெயரில் ஒவ்வொரு ஆண்டும் கல்வி உதவி வழங்கவும், தீர்மானித்துள்ளோம். நிதி உதவி வேண்டுபவர்கள் சங்கத்தோடு எப்பொழுதும் தொடர்பு கொள்ளலாம். சங்கக் கட்டிட நிதிக்கு இராயவரம் எம்.ஏ.எம். சுப்பு அவர்கள் ரூபாய் ஒரு லட்சம் வழங்கியிருப்பது சங்கத்திற்குக் கிடைத்த பெரும் பாக்கியம். மேற்படி தொகையையும் சேர்த்து சுமார் ரூ.3 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டியுள்ளோம். சங்கத்தின் நிதிக்கு வருமான வரிச் சட்டம் 80 ஜி பிரகாரம் வரி விலக்குப் பெற்றுள்ளோம்.

---

‡ *தன் அபிப்பிராயத்தை வேண்டும் பொழுது மாற்ற வல்லவன் அறிஞன். மடையனோ அதை ஒரு பொழுதும் மாற்ற மாட்டான்.*

''சங்கத்தோடு வெவ்வேறு சங்கங்கள் தொடர்பு கொண்டு ஒரு 'காமன் அசோசியேஷன்' ஏற்படுத்திட வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆகையால், ஒவ்வொரு ஊரிலுமுள்ள இளைஞர்கள் ஒன்றுகூடி சங்கங்களை அமைக்க இந்த வேண்டுகோளுக்கு இணங்கித் தொடர்பு கொள்ளலாம். — இவ்வாறு ஆர்எம். நாராயணன் அவர்கள் பேசினார்கள்.

வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தனது தலைமையுரையில், இளைஞர்கள் ஒன்று கூடி தொடங்கியுள்ள இந்தச் சங்கம் நன்கு வளரவும், சாதனைகள் பல புரியவும், சமூகச் சேவைகள் செய்யவும், வாழ்த்தினார்கள். ஒவ்வொரு ஊரிலும் இதுபோல் சங்கங்கள் தோன்றி சமூகத்தை மேம்படுத்த முயற்சிகள் செய்யவேண்டும் என்றும் இனி இளைஞர்கள்தான் சமூக மேம்பாட்டினைப் பற்றிச் சிந்திக்கவேண்டும் என்றும், இளைஞர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு ஊரிலுமுள்ள இளைஞர்கள் ஒன்றுகூட சந்தர்ப்பங்கள் ஏற்படுத்த வேண்டும் என்றும் அடிக்கடி மாநாடுகள் நடத்தி சங்கத்தில் தோன்றியுள்ள இடர்ப்பாடுகளைக் களையவேண்டும் என்றும், சங்கத்திலுள்ள வசதிபடைத்த இளைஞர்கள் முன்னுக்கு வந்தால்தான் சாதனைகள் நிகழ்த்த முடியும் என்றும் கூறி வாழ்த்தினார்கள். தொடக்க விழாவில் சங்கத்தினைத் தோற்றுவித்த தலைவர் திரு. ஆர் எம். நாராயணனுக்கும், மேற்படி சங்கத்தின் நிதியைப் பெருக்கிய நிதி வளர்ச்சிக் குழுத் தலைவரான திரு. எம். ஏ. எம். சுப்புவிற்கும் காஞ்சிப் பெரியவர்கள் ஆசியுடன் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

இவ்விழாவில் பழ. கருப்பையா அவர்களும் சங்கத்தினை வாழ்த்தியும், சாதனைகள் பல புரிந்திடவும், சமூகச் சேவைகள் செய்வதில் முனைப்பும், ஆர்வமும் காட்ட இறைவன் அருள்புரிய வேண்டும் என்றும் வாழ்த்திப் பேசினார்கள். விழாவில் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும், பழ. கருப்பையா அவர்களுக்கும் பொன்னுடைகள் போர்த்தப்பட்டன. ஏ. சேது அவர்கள் அளித்த விருந்துடன் விழா நிறைவுற்றது.

புத்திகளின் வகைகள்


பருந்துப் புத்தி :- பிறர் பொருளைப் பறித்து அனுபவிப்பது.
நாய்ப் புத்தி :- தன் இனத்தையே விரட்டுவது.
குதிரைப் புத்தி :- பிறருடைய தூண்டுதலுடன் வாழ்வது.
குரங்குப் புத்தி :- நிதானமின்றி முன்கோபத்துடன் வாழ்வது.
முயல் புத்தி :- எதற்கு மிரளும் தன்மையுடன் வாழ்வது.
கழுதைப் புத்தி :- பொறுமையை அதிகம் கடைப்பிடித்து வாழ்வது.
நரிப் புத்தி :- தந்திரத்துடன் வாழ்வது.
இந்த ஏழு வகைப் புத்திகளையும் வென்று நிதான புத்தியுடன் வாழ்வதே நல்லது.

— கவிஞர் சிவல்புரி சிங்காரம்.

அறிமுகமும் பாராட்டும்

டாக்டர் சுப. அண்ணுமலே

கல்விக் கூடங்களில், இலக்கிய உலகில், பட்டி மன்றங்களில் 'டாக்டர் சுப. அண்ணுமலே' என்ற பெயர் பிரபலமானது. சிவந்த மேனி; சுமாரான உயரம்; சிந்தித்துச் செயல்படும் திறன்; தெளிவான பேச்சு - இவை அமையப் பெற்றவர்கள் டாக்டர் சுப. அண்ணுமலே அவர்கள். தேவகோட்டை இவர்களது சொந்த ஊராகும்.



சென்னே பச்சையப்பன் கல்லூரி மாணவரான இவர்கள், தாம் பயின்ற கல்லூரியில் தமிழ்மன்றத் தலேவராகப் பணியாற்றியிருக்கிருர்கள். B. O L. (Hons) பட்டம் பெற்ற பின் இவர்கள் 1953ல் மதுரை தியாகராசர் கலேக் கல்லூரியில் தமிழ்த் துறைத் துணே ஆசிரியராகப் பொறுப்பேற்று, இலக்கணம் மற்றும் கடினமான இலக்கியப் பாடங்களே கற்பிக்கத் தொடங்கினுர்கள். 'குற்ருலக் குறவஞ்சி' போன்ற இலக்கியப் பாடங்களே இவர்கள் இசையுடன் பாடி நடத்தினுர்கள்.

எம். லிட். பட்டம்

'பழங்காலத்தில் நுண்கலேகளும் அறிவியலும்' என்ற பொருள் பற்றி இவர்கள் ஆய்வு செய்தமைக்காக சென்னேப் பல்கலேக் கழகம் 1962ல் இவர்களுக்கு எம். லிட். பட்டம் வழங்கியது.

டாக்டர் பட்டம்

மதுரைப் பல்கலேக் கழகத்தில் பேராசிரியராக இருந்த துரை அரங்கனுர் அவர்களின் தூண்டுதலின் பேரில் இவர்கள் 'திருவருட்பா'வின் பாடல்கள், உரைநடைகள், கடிதங்கள், விளக்கங்கள் ஆகியவை பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டதன் பயனுகச் சென்னேப் பல்கலேக் கழகம் 1968ல் இவர்களுக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியது. இந்த ஆய்வு நூல் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதாகும்.

பம்பாய் பாரதீய வித்யா பவன் இந்த நூலேச் சுருக்கி 'The Life and Works of Saint Ramalingar' என ஓர் நூல் வெளியிட்டுள்ளது. இந்த நூல் இப்போது மலேயாளத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

டாக்டர் சுப. அண்ணுமலே அவர்கள் 1968ல் தியாகராசர் கலேக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலேவராகவும் பேராசிரியராகவும் கல்விப் பணி புரியும் வாய்ப்பினேப் பெற்ருர்கள்.

மாணுக்கர்கள்

இன்றைய தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கே. காளிமுத்து அவர்கள், கவிஞர் காமராசன்

❖ பெருநெறி பிடித்து ஒழுகுகிறவர்களுக்குக் கடவுளே அடைதற்குரிய மேலாம் அறிவு தானுக உதயமாகிறது.

அவர்கள், அரசியலில் உள்ள பெ. சீனிவாசன் அவர்கள் (முன்னாள் தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர்) கதை, வசனகர்த்தா இயக்குநர் ஏ. எஸ். பிரகாசம் அவர்கள் ஆகிய எண்ணற்றோர் இவர்களது மாணக்கர்கள் ஆவார்கள்.

வெளிநாட்டுப் பயணம்

டாக்டர் அவர்கள் ''தமிழ் முரசு'' சாரங்கபாணி அவர்களின் முயற்சியால் 1968ல் மலேயாவில் நடைபெற்ற தமிழர் விழாவில் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

மற்ற நிகழ்ச்சிகள்

இவர்கள் 1981ல் உத்தரப் பிரதேசம் டேராடூன் அருகே ராஜ்பூரில் நடைபெற்ற கிறிஸ்தவ—இந்து சமயங்களின் கருத்தரங்கிலும் அதே ஆண்டு நவம்பரில் டில்லியில் நடைபெற்ற கல்லூரி முதல்வர்கள் மறு பயிற்சிக் கருத்தரங்கிலும் 1982 மேயில் காஷ்மீரில் நடைபெற்ற உலகப்பல்கலைக் கழகச் சேவை நிறுவன ஆண்டு விழாவிலும் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

சொற்பொழிவு

சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் அறக்கட்டளைகளின் சார்பாக இவர்கள் இராமலிங்கரைப் பற்றி சொற்பொழிவாற்றி இருக்கிறார்கள். மதுரைப் பல்கலைக்கழகத்தில் இராமலிங்கரைப் பற்றி 20 நாட்கள் திருவருட்பா கோடை வகுப்பு நடத்தியிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் இவர்கள் இலக்கியச் சொற்பொழிவு நடத்தாத இடம் இல்லை; பங்கு பெறாத பட்டி மண்டபங்கள் இல்லை. வானொலியிலும் இவர்களது குரல் அடிக்கடி ஒலிக்கும்.

நூலாசிரியர்

டாக்டர் சுப.அண்ணாமலை அவர்கள் 'உருவும் உணர்வும்' 'பண் சுமந்த பாடல்' 'பனிரெண்டாந் திருமுறை' ஆகிய நூல்களை இயற்றியிருக்கிறார்கள்.

பதிப்பாசிரியர்

1975ல் வெளியிடப்பட்ட 'பால கவி' வே. இராமநாதன் செட்டியார் அவர்களின் மணி விழா மலருக்கும் 1982 தொடக்கத்தில் வெயிடப்பட்ட வயிரவன் கோவில் கும்பாபிஷேக மலருக்கும் இவர்கள் பதிப்பாசிரியராக இருந்து சிறந்த பணியாற்றியிருக்கிறார்கள்.

1958 முதல் 1975 வரை சுமார் 16 ஆண்டுகள் மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவராக இருந்து இவர்கள் சேவை புரிந்தது மறக்க முடியாதது.

1977லிருந்து தியாகராசர் கல்லூரியின் முதல்வராக அரும் பணியாற்றிவரும் இவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் முதுகலைக் கல்விக் குழுவிலும் இந்திய இசைக் கல்விக் குழுவிலும் உறுப்பினராக இருக்கிறார்கள்.

டாக்டர் அண்ணாமலை அவர்கள் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று கல்வித் தொண்டாற்ற உளமார வாழ்த்துவோம்.

— எல். சுந்தரம்

※ 'ரேப்பு' என்ற பெயரில் தெலுங்கு மொழியில் ஒரு பத்திரிகை வெளிவருகிறது. தெலுங்கில் 'ரேப்பு' என்றால் 'நாளை' என்று பொருளாம்!

※ மருத்துவத் துறையில் 'டாக்டர்' பட்டம் பெற்ற, முதல் இந்தியப் பெண்மணி டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி ஆவார். இவர் 1912ல் டாக்டரானார்.

— வி. ஆர். சின்ன அருணசலம்
தேவகோட்டை

கலியுகம் என்ன செய்யும்?

கவிஞர் சிவல்புரி சிங்காரம்
கீழச்சிவல்பட்டி

தந்தைசொல் கேட்டே எந்தத்
தனயனும் நடப்ப தென்றால்
அந்தநாள் இரணி யன்போல்
அனைவரும் வாழ்ந்தி ருப்பார்!
மந்திரிக் கழகு நல்ல
வரும்பொருள் உரைத்த லென்றால்
இந்தநாள் பணம்கு விக்கும்
இயல்பினை வளர்த்தி ருப்பார்!

ஈவதை விலக்க லாமோ
என்றுதான் நினைத்தி ருந்தால்
பாவம்என் றுலகு ரைக்கப்
பணமின்றி வாழ்ந்தி ருப்பார்!
ஆவிதான் பிரிவ தற்குள்
அனைவர்க்கும் உதவ எண்ணின்
ஏவிடும் சொற்க ளாலே
ஏற்பதும் இகழ்ச்சி என்றார்!

முன்னவர் சொற்க ளெல்லாம்
முத்தாக இருந்த போதும்
இந்நாளில் கடைப்பி டிக்க
எங்களால் முடிய வில்லை!
பொன்னாலும் பொருளி னாலும்
புகழாலும் மனதில் மாற்றம்
கண்ணாரக் கண்ட பின்னும்
கலியுகம் என்ன செய்யும்?

❖ சத்தியத்தைக் கடைப்பிடிக்கிறவனது வாழ்வு ஒரு நாளும் தோல்வியடையாது.

உங்களுக்குத் தெரியுமா ?

உலகிலேயே மிகப் பெரிய நூல் நிலையம் :
லெனின் நூல் நிலையம். இருப்பிடம்-மாஸ்கோ (ரஷ்யா) தோற்றம்: 1849ஆம் ஆண்டு. மொத்த நூல்களின் எண்ணிக்கை 54 இலட்சம். பணியாளர்கள்: 2000 பேர் கட்டிடத்தின் நீளம்: ஒன்றரை பர்லாங்.

உலகிலேயே மிகப் பெரிய கப்பல்:
க்வீன் எலிசபெத். நீளம்-1029 அடி. 2283 பேர் பயணம் செய்யலாம். எடை: 83,673 டன்கள்.

உலகிலேயே மிகப் பெரிய விமானம்:
கோலக் சி சி 54. அமெரிக்காவில் 1968ல் தயாரிக்கப்பட்டது. நீளம் 300 அடி; உயரம் 6 அடி; எடை ஐந்து இலட்சம் பவுண்டு.

உலகிலேயே மிகப் பெரிய கடிகாரம் :
கால்கேட். நியூயார்க்கில் 'வாரன்டேவி' என்ற அமெரிக்கரால் 1924ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் உருவாக்கப்பட்டது. பெரிய முள்ளின் நீளம் 27 அடி. சிறிய முள்ளின் நீளம் 19 அடி. இது மின்சாரத்தால் இயங்குகிறது.

உலகிலேயே மிகப் பெரிய திரை அரங்கு :
பெயர் - ரேடியோ சிட்டி மியூசிக் ஹால். இடம் - நியூயார்க். மேடையின் நீளம் 144 அடி; அகலம் 66 அடி 6 அங்குலம். 6400 பேர் ஒரே சமயத்தில் அமரலாம்.

ஆதாரம் : 'அதிசய உலகம்' என்ற புத்தகம்.

தொகுத்து அனுப்பியவர் : செ. விசுவநாதன்.
ஆவினிப்பட்டி.


சென்னையில் பகல் 12 மணி என்றால்
மற்ற நகரங்களில் அப்போது நேரம் என்ன?

இலண்டன்	காலை	5-41
பாரீஸ்	,,	6-42
பெர்லின்	,,	7-41
மாஸ்கோ	,,	9-45
பம்பாய்	பகல்	11-29
கராச்சி	,,	11-40
டில்லி	,,	11-47
கொழும்பு	,,	11-58
இரங்கூன்	,,	1-04
கோலாலம்பூர்	,,	1-25
வாஷிங்டன்	இரவு	7-38
நியூயார்க்	,,	7-44

அறிமுகமும் பாராட்டும்

பாகனேரி வே. வேலாயுதம் செட்டியார்

சிவந்த மேனி; புன்னகை தவழும் முகம்; தன்னுல் இயன்றவரை பிறருக்கு உதவும் பண்பு; இவற்ரேடு 'பளிச்'சென்ற கதராடையுடன் காட்சி தருகிருர், என்றும் காங்கிரஸ்காரராக இருக்கும் பாகனேரி வே. வேலாயுதம் செட்டியார் அவர்கள்.



பாகனேரி என்றவுடன் 'சட்'டென்று நினைவுக்கு வரும் சிலரில் இவர்களும் ஒருவர். 59 வயதிலும் தளராத நடைபோடும் இவர்கள் 1936 முதல் கதராடை அணிந்து வருவதோடு அதன் வெள்ளை நிறம் போல வெள்ளை உள்ளம் கொண்டவர்களாகவும் இருக்கிருர்கள் என்பது ஒரு சிறப்பு.

இவர்கள் 1942ல் நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டு அதன் பயனுகச் சிவகங்கையில் சிறைவாசம் அனுபவித்தவர்கள்.

தேர்தல்

ஆச்சாரிய கிருபளானி தலைமையில் இருந்த பிரஜா சோஷலிஸ்ட் கட்சிச் சார்பில் இவர்கள் 1952ல் சிவகங்கைச் சட்டமன்ற உறுப்பினர் தேர்தலில் நின்ருர்கள். ஆனல் வெற்றி வாய்ப்பு இவர்களுக்கு இல்லாமல் போயிற்று.

ஊராட்சி ஒன்றியத் தலைவர்

1965 முதல் 1970 வரை இவர்கள் பாகனேரி ஊராட்சித் தலைவராகவும், காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியத் தலைவராகவும் இருந்து சிறந்த சேவை செய்திருக்கிருர்கள். இவர்களது பதவிக் காலத்தில் இவர்கள் ஏற்படுத்திய பள்ளிக் கட்டிடங்கள், சாலை வசதிகள், சமுதாயப் பணிகளைக் காளையார் கோவில் ஒன்றிப்புப் பகுதி மக்கள் இன்னும் நினைவில் கொண்டிருக்கிருர்கள்.

வெளிநாட்டுப் பயண அனுபவம்

1954ல் திருமதி உமா நேரு தலைமையில் டாக்டர் சௌந்தரம் இராமச்சந்திரன் ஆகியோரோடு சைனு சென்ற இந்திய நல்லெண்ணத் தூதுக் குழுவோடு நம் வேலாயுதம் செட்டியார் அவர்களும் சென்று வந்தார்கள்.

1955ல் பின்லாந்து நாட்டின் தலைநகரான ஹெல்சிங்கில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டிலும் இந்தியத் தூதுக் குழுவில் ஒருவராக இவர்கள் சென்று கலந்து கொண்டார்கள். பின்னர் டாக்டர் சைபுதீன் கிச்லியின் தலைமையில் சோவியத், செக்கோஸ்

❖ வாழ்நாள் முழுவதிலும் வாய் பொத்தி இரு. கண்ணையும் காதையும் அடக்கி ஆள். அப்பொழுது நீ துன்பத்துக்கு ஆளாகமாட்டாய்.

லேவேகியா நாடுகளில் 2 மாதங்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார்கள்.

1971ல் ஹங்கேரி நாட்டின் தலைநகரான புடாபெஸ்ட்டில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டிற்கு முன்னுள் மத்தியப் பாதுகாப்பு அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனன் அவர்கள் தலைமையில் சென்ற தூதுக்குழுவோடு இவர்களும் சென்று வந்தார்கள். அதன் பிறகு மீண்டும் 15 நாட்கள் சோவியத் நாட்டில் சுற்றுப் பயணம் செய்தார்கள்.

கும்பாபிஷேகம்

பாகனேரி பழைய வளவில் இவர்கள் ஸ்ரீ தெண்டாயுதபாணி சுவாமிக்குப் புதிதாகக் கோவில் ஒன்றை நிர்மாணித்து 1978ல் அதற்குக் கும்பாபிஷேகத்தைச் செய்து வைத்தார்கள். அதன் அருகே அமைந்திருக்கும் பாரத விநாயகர்கோவிலைப் புதுப்பித்துத் தம் சொந்தச் செலவில் 1978ல் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

பாகனேரியில் அமைந்து அருள் பாலித்து வரும் ஸ்ரீ புல்வநாயகி அம்மன் கோவிலை நாட்டார் நகரத்தார் சேர்ந்து அண்மையில் புதுப்பித்துத் திருப்பணி செய்த போது அதன் தலைவராக இருந்து சிறப்பித்தார்கள்.

வேலாயுதம் செட்டியார் அவர்கள் மீண்டும் நல்ல பல பதவிகளைப் பெறவும், அதன் மூலம் சமுதாயத்திற்கு நல்ல தொண்டாற்றவும் உளமார வாழ்த்துவோம்.

— எல். சுந்தரம்

நெஞ்சில் நிறைந்தவர்

உலகில் எத்தனையோ பேர் பிறக்கிருர்கள்; எத்தனையோ பேர் வாழ்கிருர்கள். ஆனுல் பிறந்த அத்தனை பேரும், வாழ்கிற அத்தனை பேரும் 'நெஞ்சில் நிறைந்தவர்' ஆகிவிடுவதில்லை.

குணநலன்கள்

நம் 'லெட்சுமி' சிங்காரம் செட்டியார் அவர்கள் ஓர் தனிப் பிறவி. அன்புள்ளம், கருணைக் குணம், பிறருக்கு உதவும் பண்பு, கடின உழைப்பு, காரியமாற்றுவதில் சுறுசுறுப்பு அத்தனையும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள்.



வாழ்க்கைக் குறிப்பு

'லெட்சுமி' சிங்காரம் செட்டியார் அவர்கள் இலங்கையில் தம் தொடக்கக் கல்வியையும், திருக்காட்டுப்பள்ளியில் உயர் கல்வியையும்

பின்னர் மதுரை தியாகராசர் கலைக் கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் கல்லூரிக் கல்வியையும் கற்றூர்கள். (இவர்கள் இக்கல்லூரியின் முதல் மாணவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது)

1952ல் தம் தந்தையார் முத்துப்பழனியப்ப செட்டியார் அவர்களோடு வணிகத் துறையில் நுழைந்த இவர்கள் கடைசி வரை வெற்றிப் படிகளிலேயே ஏறுநடை போட்டார்கள். அச்சுக் காகிதத் தொழிலில் இவர்கள் புரட்சியும் புதுமையும் செய்ததை நாடு நன்கறியும்.

பதவிகள்

அகில இந்திய பேப்பர் வியாபாரிகள் சங்கத்தின் தலைவராக... மதுரை ஐயப்பா சேவா சங்கத்தின் தலைவராக ... மதுரை நகரத்தார் சங்கத்தின் துணைத் தலைவராக... அரிமா சங்கத்தின் பொருளாளராக இருந்து இவர்கள் சிறப்பான பணி புரிந்திருக்கிறூர்கள். பதவிகளால் இவர்கள் பெருமை கொள்ளவில்லை; மாறுக இவர்களால் அவைகளுக்குப் பெருமை கிடைத்தன.

'லெட்சுமி' சிங்காரம் செட்டியார் அவர்கள் கல்லூரி மாணவனைப் போல பல வண்ணங்களில் புதிய 'டிசைன்'களில் உடை அணிவதில் விருப்பமுள்ளவர்கள்.

பாசமுள்ள அண்ணனை, பொதுநலத் தொண்டரை, ஏழைகளுக்கு அள்ளிக் கொடுக்கும் வள்ளலை, தன்னைப்போல் பிறரும் வாழ்வில் உயர வேண்டும் என்று மனதார விரும்பும் நல்ல உள்ளத்தவரை கொஞ்சம் கூட இரக்கமில்லாமல் தன்னிடத்தே அழைத்துக்கொண்டுவிட்ட காலனை எவ்வளவு சபித்தாலும் தகும்.

காரைக்குடி மாநாடு

காரைக்குடியில் நடைபெற்ற நகரத்தார் நல உரிமை மாநாட்டுக்குப் பொருளாளராக இருந்து, திரு. வி.என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்குத் தோள் கொடுத்து அவர்கள் பணி புரிந்தது மறக்கக் கூடியதா என்ன? தொண்டர்களோடு தொண்டராக இருந்து பணி புரிந்தது; இரவு பகல் பாராது காரியமாற்றியது; ஊர் ஊராகச் சென்று ஆதரவு திரட்டியது; வேண்டிய உதவிகளை, வேண்டிய பொருள்களை, வேண்டிய நேரத்தில் தந்து மாநாடு முழு வெற்றிபெற பாடுபட்ட அந்தப் பெருந்தகையாளரை இனி எப்போது காணப்போகிறூேம்?


நெற்குப்பை தந்த மாணிக்கக் கல்லான அவர்களின் ஒளி வீசும் கண்களையும், மலர்ந்த முகத்தையும், கனிவான குரலையும், அன்பொழுக அவர்கள் உரையாடிய, பழகிய நாட்களையும், இனிச் சந்திக்க இயலாது என்பதை நினைத்தால் நெஞ்சம் விம்முகிறது; கண்கள் குளமாகின்றன.

வாழ்க அவர்களது தொண்டுள்ளம்! வளர்க அவர்களது புகழ்!

கற்கோயில் கட்டிவைத்த நகரத் தார்கள்
கவின்மிகுந்த மாநாடு கண்ட செல்வர்
நெற்குப்பை லெட்சுமிசிங் காரம் என்னும்
நிகரில்லாத் தனித்தொண்டர் நினைவு வாழ்க!

— எல். சுந்தரம்

ஃ இனி நிகழப் போவதைக் குறித்துக் கவலைப்படாதே.
இப்பொழுது செய்ய வேண்டியதை நன்கு நிறைவேற்று.



மணமகன் : சுப்பிரமணியன் B.E. (M.B.A) (பூலாங்குறிச்சி மு. சு. இராமநாதன் செட்டியார் அவர்களின் புதல்வன்) மணமகள் : மீனாட்சி (கண்டவராயன்பட்டி நா. சி. சொ. சிவ சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் புதல்வி). இவர்களது திருமணம் 2—6—82 அன்று கண்டவராயன்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!




சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத்தில் 30—5—82 அன்று நடைபெற்ற விழாவில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளிடம் இளைஞர் சங்கத்தலைவர் திரு. ஆர் எம். நாராயணன் பாத காணிக்கை அளித்து அருளாசி பெறும் இனிய காட்சி.



சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத்தினர் நடத்திய விழாவில் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கு வாழ்த்துப்பா ஒன்றினை வாசித்தளித்தனர். படத்தில் திரு. எம்.ஏ. கலைஅரசன் (செயலாளர்) திரு. ஆர் எம். நாராயணன் (தலைவர்) திரு. எம்.ஏ.எம். சுப்பு (அடுத்த தலைவர்) ஆகியோர் உள்ளனர்.




சேலம்-நகரத்தார் இளைஞர் சங்கக் கட்டிட நிதிக்கு இராயவரம் எம். ஏ. எம். சுப்பு அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை வழங்கியதைப் பாராட்டி திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் திரு. சுப்புவுக்குப் பொன்னுடை அணிவிக்கும் கவின்மிகு காட்சி.



கண்டவராயன்பட்டி நா. சி. சொ. சிவசுப்பிரமணியம் செட்டியார் அவர்களின் புதல்வி, செல்வி மீனாட்சியின் திருமண விழாவில் மணமக்களோடு திரு. வி. என். சிதம்பரம் செட்டியார்



சேலம் விழாவில், நகரத்தார் செய்த தர்மங்களை, அறப் பணிகளைப் பாராட்டிப் பேசிய காஞ்சி சுவாமிகள் அருளாசி வழங்கிடும் அற்புதமான காட்சி.



டாக்டர் என்.என். கண்ணப்பன் அவர்களுடைய 'பாலமுருகன் கிளினிக்'கை வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள் குத்து விளக்கேற்றித் திறந்து வைத்தபோது எடுத்த படம்.

நகரத்தார் நல உரிமை மாநாடு

காரைக்குடியில் 22—2—1981 அன்று சிறப்புற நடைபெற்ற நகரத்தார் நல உரிமை மாநாட்டின் கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு செலவுகள் நீக்கி இருந்த தொகை, நன்கொடையாளர்களுக்கு 20:/. வீதம் தனித்தனியாக பாங்க் டிராப்ட் மூலம் (கணக்கு நகலுடன்) அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என மாநாட்டின் செயலாளர் வி. என். சிதம்பரம் செட்டியாரவர்கள் அறிவிக்கிறார்கள்.

நன்கொடையளித்தவர்கள் இது தொடர்பான கணக்கு விவரங்களை எப்பொழுது பார்க்க விரும்பினாலும் வந்து பார்க்கலாமெனவும் தெரிவிக்கிறார்கள்.

மதுரை நகரத்தார் சங்கத்தின் ஆண்டு விழா

மதுரை நகரத்தார் சங்கத்தின் 26-ஆவது ஆண்டு விழாவும் பேரவைக் கூட்டமும் 4—7—82 ஞாயிறன்று மாலை 4 மணிக்கு நம் நகர விடுதியில் நடைபெறவிருக்கிறது.

லெ. அழகுசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையேற்க மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின் அறங்காவலர் குழுத் தலைவர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் குழந்தைக் கவிஞர் ' தமிழ்ப் பேரவைச் செம்மல் ' அழ. வள்ளியப்பா அவர்களும் சிறப்புரையாற்றவிருக்கிறார்கள்.

நகரத்தார் பெருமக்கள் குடும்பத்துடன் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு சங்கச் செயலாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நிர்வாகிகள் தேர்வு

மதுரை அச்சுக் காகித வியாபாரிகள் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் 1982-83ஆம் ஆண்டிற்கு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

திரு. கே. பத்மநாப அய்யர் (ஸ்ரீ கணேஷ் ஸ்டோர்ஸ்) தலைவராகவும், திரு. ஏ. அருணாசலம் செட்டியார் (பழனியப்பா அன் கோ) துணைத் தலைவராகவும், திரு. எஸ். முத்துராஜா (லெட்சுமி பேப்பர் ஸ்டோர்ஸ்) செயலாளராகவும் திரு. பிஎல். எம். முத்தையா (ஏ.எஸ். ஏ. பேப்பர் ஸ்டோர்ஸ்) உதவிச் செயலாளராகவும், திரு. எல். சிங்காரம் (ஸ்ரீ மீனாட்சி அன் கோ) பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத்தின் வேண்டுகோள்

சேலம் நகரத்தார் இளைஞர் சங்கத்தினர் நகரத்தார் பெருமக்களுக்கு விடுத்திருக்கும் வேண்டுகோள் :—

நகரத்தார் சமூகத்தில் வசதியில்லாத பெண்களும், விதவைகளும், அன்றாட உணவிற்கும் வாழ்க்கைச் செலவிற்கும் வழியில்லாது தவிக்கிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. வசதியற்றவர்களின் வாழ்வு மேம்பாட்டிற்காக சேலம் நகரத்தார் இளைஞர் சங்கம் ''குடிசைத் தொழில் மையம்'' (Cottage Industry Centre) ஒன்றைத் தொடங்க உள்ளது. அனேகமாக அந்த மையம் சேலத்திலே அமையப் பெறும். அந்த மையத்தில் கீழ்க்கண்ட தொழில்கள் செய்துகொள்ள வசதிகள் செய்யப்படும்.

தையல் தொழில்

சுமார் 20 தையல் இயந்திரங்கள் வாங்கி அதன் மூலம் பெண்கள் தையல் வேலை செய்து, அவர்களுடைய தொழில்களில் தயாராகும் துணிகளை வெளியில் வியாபாரம் செய்யவும் ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும்.

சோப் தயாரித்தல்

பெண்கள் மூலம் சோப் தயாரித்து வெளியில் வியாபாரத்திற்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படும்.

பைண்டிங் மற்றும் பிரிண்டிங்

பெண்களுக்கு பைண்டிங், மற்றும் பிரிண்டிங் வேலைகள் கற்றுக் கொடுத்து வெளியிலிருந்து ஆர்டர்கள் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.

மேற்கண்ட தொழில்கள் தவிர அவ்வப்பொழுது பல்வேறு தொழில்களும் சேர்த்து நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும். தொழில்களில் ஈடுபடும் பெண்களுக்கு உணவு வசதியும் அவர்களுடைய செலவிற்குப் பணமும் வழங்கப்படும். குடிசைத் தொழில் மையத்திலிருந்து வரும் வருமானம் அந்த மையத்தின் வளர்ச்சிக்கு முதலீடு செய்யப்படும். தொழில்களைச் செய்து வரும் பெண்களுக்கு திருமணம்போன்ற காரியங்களுக்கு சன்மானமும் வழங்கப்படும். ஆகையால் தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள விரும்பும் பெண்கள் எங்கள் சங்கத்திற்கு எழுதலாம்.

இந்த வேண்டுகோளைக் காணும் கனவான்களும், வசதி படைத்தவர்களும் தங்களால் முடிந்த அளவு நன்கொடைகள் அனுப்பி நம்

❖ பிறர் படைத்துள்ள உடைமைகளைக் குறைக்க முயலலாகாது. ஆனால் தன் உடைமைகளைக் குறைப்பதற்கேற்ப மனிதனுக்கு மனபரிபாகம் வருகிறது.

சமூகம் நலமுடன் மேம்பட வழிசெய்து உதவிபுரியக் கேட்டுக்கொள்கிறோம். நீங்கள் வழங்கும் நன்கொடைகளுக்கு வருமான வரிச் சட்டம் 80 ஜி பிரகாரம் வரி விலக்கு உண்டு. ஆகையால், தாராளமாக நிதி உதவி செய்யுங்கள். ''குடிசைத் தொழில் மையம்'' பற்றி மேற்கொண்டு விவரங்கள் தெரிந்துகொள்ள வேண்டுமானால் தயவுசெய்து எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

ஏற்கனவே வசதி படைத்த தொழில் அதிபர்கள் சிலர் தையல் இயந்திரங்கள், பிரிண்டிங் மிஷினரிகள், சோப்புகள் தயாரிக்க மெஷினரிகள் வாங்கிட நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளார்கள். உங்களுடைய உதவி ஆதரவற்ற பல பெண்கள், வாழ்க்கையில் முன்னேற உதவிடும்.

எங்கள் முகவரி : **சேலம் நகரத்தார் இளைஞர் சங்கம்**
139-A, முதல் அக்ரஹாரம், சேலம்-636001.

காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகள் திருவிழா

காவிரிப்பூம்பட்டினத்தில் திருவெண்காடராகிய பட்டினத்தடிகளுக்கு 25—7—82 ஞாயிறு முதல் 5—8—82 வியாழன் வரை திருவிழா நடைபெறவிருக்கிறது.

25—7—82 தொடக்க நாளன்று அனுக்ஞை விக்னேசுவர பூஜை திருவெண்காடர் திருவவதாரம். 29—7—82 5-ஆம் திருவிழாவன்று திருவெண்காடர் மகன் தந்த பெட்டியைப் பார்த்துத் துறவறம் ஏற்றலும் 30—7—82 6-ஆம் திருவிழாவன்று தமக்கை தந்த நஞ்சு கலந்த அப்பத்தை அவள் வீட்டுக் கூரையில் பட்டினத்தார் போடத் தன்வினை தன்னைச் சுட்டு ஓட்டப்பம் வீட்டைச் சுட்டதும் 31—7—82 7-ஆம் திருவிழாவன்று பட்டினத்தடிகள், இறந்த தாயை வாழைத் தண்டுகளில் வைத்து எரித்தலும், 3—8—82 10-ஆம் திருவிழாவன்று திருவொற்றியூரில் சமாதியானதும் நடைபெற விருக்கும் முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

பெலகோடு எஸ்டேட்ஸில் மகா கும்பாபிஷேகம்

கர்நாடக மாநிலம், ஹாசன் மாவட்டத்திலுள்ள, பெலகோடு எஸ்டேட்ஸின் அருமைச் சூழலில் அமைந்துள்ள அருள்மிகு திருமால் துயர்தீர்த்த விநாயகர் நூதன ஆலயத்தின் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 6-5-82 அன்று சிறப்பாக நடைபெற்றது. இதை எஸ்டேட்டின் நிர்வாகத்தார் செய்துவைத்துச் சிறப்புப் பெற்றார்கள்.

அப்பர் பெருமானுக்கும் மனைவாழ்வாம்

பழ. சண்முகம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் ஒரு பகுதியில் ஒரு சமூகத்தார் அன்றும் இன்றும் மங்கலநாண் கட்டுவதை (தாலி கட்டுவதை) 'திருப்பூட்டுவது' என்றே வழங்குவர். ஆவண ஓலையிலும் அவ்வாறே எழுதி வருகின்றனர். பதினாறு வகைத் 'திரு' வையும் அந்த மங்கலநாண் சேர்த்தணைத்துக் கொண்டு இல்லறத்தை நடத்தி வரும் நெஞ்சினிக்கும் நீடிய திருவாம் இது. இது ஒருபுறமிருக்க இக் கட்டுக்கோப்பை மீறி உடலின் (தோல் தினவு) தினவு உணர்ந்திடக்க முடியா எளிமையால் (ஆற்றலில்லாது) காமக் கிழத்தியர்பால் (வரைவின் மகளிர் போன்றவர்களைத் தொட்டுக் கொள்ளுதல்) ஆசைவைத்து அவர்கள் வயிற்றிலும் 'குழந்தைக் குட்டி' என்று பெருக்கும் நிலையான வைப் புத்தாரத்தையும் நினைவூட்டக் கருதியருளுவர் தேவார ஆசிரியப் பெருந்தகை அருளாளர். பொருட் பெண்டிரான இவர்கள் மாறுவதுண்டு. நீடித்து சொந்த மனையாள் போன்று நீடிப்பதும் ஏகதேச மரபு. கூடியவன் கைப்பொருள் கழன்றோடும் வரை பசப்புவர். பின்பு யார் யாரோ, எவர் எவரோ, என்ற அவலநிலை. இதற்கு விளக்கம் கூறுவது மிகை. விதிவிலக்கு என்பது எதிலும் உண்டன்றோ! இவர்களிலும், கொண்ட திருநாண் பூட்டிய துணைவியைக் காட்டிலும் பரிந்து பாசம் காட்டுபவர், உண்மையிலே உண்டு. கொண்ட மனைவியரிலும் சிலர் வைப்புத்தாரம்போல் கழன்றோடுவதுமுண்டு. இவ்வகை எங்கோ ஒன்றிரண்டு விரல்விட்டு எண்ணுவதை நாம் பொதுமை வழக்குக்குக் கொள்ளுதல் சார்பாகாது. மணந்த தாரத்துக்குரிய பாசப் பற்று வைப்புத் தாரத்தினிடம் காணமுடியாது. சொந்தத் தாரமும், அவ்வயிற்று மக்களும் மன்றேறி வந்து உரிமை பாராட்ட நாணார். ஊராரும் இதை ஏற்பர். வைப்புத் தாரமும் அவ்வயிற்றுமக்களும் இந்நிலைக்கு நாணுவர். காரணம் பகலில் நடந்த ஊர் அறிந்த மன்றல் அல்ல. இவ்வழி மைந்தர்கள் பெற்ற தாயைத்தான் ' அம்மா ' என்று பலர் அறிய அழைப்பார்களேயன்றித் தந்தையை வீட்டில்தான் ' அப்பா ' எனக்கொண்டு, பலரறிய அவ்வாறு அழைக்கவும் கூசுவர். சொந்த வீட்டில் (மணந்த தார வீட்டில்) நடைபெறும் சிறப்புகளுக்கு வைப்புத்தாரமும் மக்களும் அழைக்கப்பெறுவதில்லை. கணவனே இவ்வழைப்பை விரும்புவதில்லை. திருநாண் பூட்டப்பெற்ற மணந்த தாரமான வாழ்க்கைத் துணைவியர் மேடையேறி உரிமை உரைப்பர். (உத்தமியர்கள் செய்வதே இல்லை. மன்றேறுவதையும் உரிமையைச் சொல்லும் பொருட்டு இங்கு குறிப்பிடலானேம்) எனவே இந்தப் பாசம் அறுப்பது எளிமை அல்ல. காமக் கிழத்தியர் நிலை பாசமே இல்லை. பாசமெலாம் கைப்பொருள் நாட்டத்

❖ பொருளை நல்வழியில் பயன்படுத்துவதற்கு ஏற்ப ஒருவனிடம், பொருள் மேலும் வளர்கிறது.

திலே வளரும். கூடியவனே விட்டாலும் விட்டு விடுவான். கூடியவனே ஓடினாலும் ஓடியதுதான். இதில் பிணைப்பின் நாட்டமே கிடையாது. தினவும் - கைப்பொருளுமே இங்கு இரண்டு கண்கள். மணந்த தாரம் ஒருபோதும் கைவிட்டகலாள். ஈருடல் ஒருயிரனையர் இவர்கள். ''பின் தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ'' என்று சான்றோர்களும் இரங்கும் நிலை. சமய முற்றுழி மங்கலத் தங்கத்தையும் (தாலியையும்) உதவும் பெற்றியள். சான்றுகள் சாற்றி வளர்த்தல் மிகை. வைப்புத் தாரம் கைவிட்டபோது கொண்டவளையே (மணந்த தாரத்தையே) நாடுவன் ஆடவன்.

வாழைப்பழம் தின்னவாய் நோவுதென்று சொல்லித்
தாழைப்பழம் தின்னு வந்ததார் வேந்தா!
தாழை கசந்ததோ தாசி தனியேவர விட்டனளோ!
தாழைத்திறவென்றால் உங்கள் குலம் தாழ்ந்திடுமோ.

என்ற மணந்த தாரக் கூற்றால் சிந்தித்துக்கொண்டவனின் (மணந்த தார ஈடுபாட்டை) பாசத்தை மறத்தல் முடியாது. பல்லாண்டு மணந்த தாரத்தை மறந்து வைப்பினளிடம் வாழ்ந்து கைவிட்டப்பட்டு நடுநிசியில் வெட்கம் உந்த, கழுத்தைக் கொடுத்தவள் வீட்டிற்கு வருகிறான் மதன். வாய் விட்டுப்பெயர் சொல்லிப் பேச நா வரவில்லை. அயலார் ஏச்சு, வரளுகிறது தொண்டை. கதவின் தாள் திறந்தாள் கற்புடையவள்; வீடுடையாள் (கிரகலட்சுமி-மங்கல மனை) இந்த நடுநிசியில் நம் வீட்டுக் கதவைத் தட்டுபவன் யாராயிருக்க முடியும். அவராக இல்லாமல்! என நினைத்து உறுதிப்பட்டு முடிந்து பாடும் பாடலே மேலுள்ளது. (தாழைப்பழம்-தேங்காய்) கனியிருக்க கல்லை கரண்டிய நிலை எனவே கொண்ட தாரப்பற்று அகற்றமுடியாத சிக்குள். இப்பற்று தோல், தசை செங்குருதி, நரம்பு-என்பு, மூளை அனைத்திலும் பிரிவறச் செறிந்த-பிரிக்க முடியாப் பிசினை பற்று என்பதை நம்மனோர் உய்த்துணரும் பொருட்டு மணந்த தாராமென்றருளினரே அல்லாது இதை வைத்து பெருமானுக்கு மனைவாழ்வுண்டு என மாற்றமுரைக்க முயலுவது சாலாது என்பது எம்மனோர் கருத்து. மணந்த தாரமென்றதால் பெருமானுக்கு மனைவாழ்வுண்டு (இவ்வாறு எழுத கை நடுங்குகிறது) எனக் கொண்டால், 'மக்கள்' என்ற பெருமானுக்கு, மைந்தர்கள் உண்டென்றும், '' அவ்வயிற்ற வரை ஓம்பும் '' என்ற சொற்றொடருக்கும் பெருமானுக்கும் பேரன்மார்கள் இருந்தனர் என்றும் நமக்குப் பின்னே வருகின்ற நம் பின்னே வருகின்ற நம் பேரர் பேத்தியர்கள் கூறப் போந்தால் நாம் தானே இக்கூற்றுக்குக் காரணர்களாவோம்.

அருளாளர்கள் நம்மனோர் கூற்றை தம்மேல் ஏறிட்டுக் கொண்டு பாடியருளுவது மரபு. பளிங்காம் சித்துப்பொருள் அவர்கள். அவர்கள் திருவுள்ளம் மாசு மருவற்ற கண்ணாடியாகும். நம் செயல்களெல்லாம் அங்கு படியும், உள்ளக் கண்ணாடியில் மாசு படியும். படிந்தவுடன்

---

‡ *கடவுள் நம்பிக்கை வைத்திருக்க வல்லவன் எளியவர்களைத் தாக்கமாட்டான்.*

தாக்கும். உடனடியாகத் துடிப்பார்கள். ஆண்டவனிடம் குறையிரப்பர் அதற்கு ஆற்றல் உண்டு. நாமாகவே அவர்கள் ஆகிவிடுவார்கள். நமக்குத் தேள் கொட்டினால் நம் துயரம் கண்டு அவர்கள் வருந்தும் நிலையினின்று மேம்பட்ட நிலையாக உள்ள நம் துயர் வடிவாகவே அவர்கள் ஆகும் நிலை. வருந்துவது வேறு. துயர்வடிவாகவே ஆதல் வேறு. ஆன்ம நேய ஒருமை என திருவருட் பிரகாச வள்ளலார் தந்தருளிய புத்துயிர்ப்புத் தமிழ்ச் சொல்லின் உள்ளீடு இதுவே ஆகும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் 'வாடினேன்' என வாய்மை சாற்றியருளுவர். வாடுதல் வேறு நிலை. பிறர் வாட்டத்துக்குத் தாம் வருந்துதல் வேறு நிலை. முன்னையது சிறப்பினும் சிறப்புடைத்து. இது பேரருள் நிலை. இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம் ஆன்ம ஒழுக்கம் என ஒழுக்கப் பிரிவு நான்கினுள் தலையாயது ஆன்ம ஒழுக்கநிலை. உயிரனைத்தும் ஒன்றென ஆகும் ஒப்பற்ற ஈடு இணையற்ற தனிப்பெருங் கருணை நிலையாகும்! ஆன்ம ஒழுக்கமாம் நான்காம் நிலை. இந்நிலையில் நம்மனோர் குடும்ப ஈடுபாட்டுச் சிக்குள் அப்பர் பெருமானைத் தாக்குகிறது. ஆண்டவனிடம் ஓலமிடுகிறார்கள். நம் மனோர் பொருட்டு. மணந்த தாரத்தை விடுவதுமில்லை. அவ்வழி வந்த மக்களையும் விடுவதில்லை. திருமணம் செய்தோம், மக்களைப் பெற்றோம்! அவர்கள் பிழைக்க வழி கண்டார்கள். அவ்வளவோடு நீங்கலாம்தானே! அவர்கள் திருமணம் அவர்களின் பிள்ளைகளுக்குத் திருமணம், பேரன் கொள்ளுப் பேரன் என்று இப்படி பற்று வளருவதைக் குறித்தனுவர் பெருமானார். இவர்களின் பாசப் பற்றுதான் துறக்கப் பெறவேண்டுமே அல்லாது அவர்களுடன் வாழ்வதைத் துறப்பதன்று. அப்பர்பெருமான் நம்மனோரிடை வாழாது எந்தக் காட்டுக்குப் போய் மக்களை (நம் மனோரைத்) துறந்தருளினார்? ஒருபோதும் அந்நிலை காண முடியாதே! மக்களே! எனப் பாடலின் முதற்சொல்லை, விளியாகக் கொண்டு உலகவரே! மனைவி மக்கள் பேரன் பேத்தியர் என்று பற்றை வளர்த்து இருளில் மாட்டி தவம் செய்யாமல் வீணே நாட்களை ஓட்டுகிறீர்களே! உங்களுக்காக அடியேன் முறையிடுகிறேன் எனப் பொருள் காண வேண்டும். கொண்டு கூட்டி உண்மையில் நாம் ஊன்றவேண்டும் செய்யுளல்லவா. உண்மையை நாட ஆழ்ந்து எங்கெங்கிருந்தோ பொருள் களை (அர்த்தம்) ஈட்டவேண்டும். முன்னைப் பிறவிகளில் இவ்வாறு சிக்குளில் மாட்டிக்கொண்டு அநுபவம் கண்டவன் எளியேன். உடலையே (களேபரம் - உடல்) பேணி தவஞ்செய்யாமல் அவஞ் செய்து ஈசன் திறம்புறக்கணித்துப் பொழுதை வீணே கழித்தவன். ஆண்டவனிடம் அழுது காமுற்று அரற்றினேனல்லேன். எனவே, நம்மவரீர்! உய்யின்கள் என்று சொல்லாமல் சொல்லி தம்பால் ஏற்றுக்கொண்டு, (பிழைத்தவைகள் அத்தனையும்) மன்றாடியிடம் மன்றாடுவதாகக் கொள்ளுவதே சிறப்பு.

❉ புகட்டுதல் பள்ளியில் முடிவுறுகிறது. கற்பதோ சாகும் வரையில் நிகழ்ந்தாக வேண்டும்.

இவைகள் இவ்வாருக, பெருமான் பாடிய்ருளிய:-


''பாலனய்க் கழிந்த நாளும் பனிமலர்க் கோதைமார்தம்
மேலனய்க் கழிந்த நாளும் மெலிவொடு மூப்பு வந்து
கோலனய்க் கழிந்த நாளும் குறிக்கோளிலாது கெட்டேன்
சேலுலாம் பழனவேலித் திருக்கொண்டீச்சரத்துளானே

என்ற தேவாரத் திருப்பாடலுக்கு எவ்வாறு பொருள் காண்பது. ஒரு எழுத்தாவது பெருமானின் வாழ்க்கைக்குப் பொருந்துமா? பொருத்திப் பேச நாவசையுமா? அசைந்தால் ''சிவ சிவ'' என்பதைத் தவிர வேறு எவ்வகையில் சமாதானமடைய முடியும்! நாவரசப் பெருந் தகைப் பெம்மானே! வழிகாட்டி ஆண்டருள் புரிக! பெரியதோர் ஆழ்ந்த அசைவிலாக் குறிக்கோளுடைய குரிசில் நாவரசர். சமண் சமயம் சார்ந்த நிலேயும் குறிக்கோளேயடையத்தான் என்பது வெளிப் படை. குறிக்கோளே (லட்சியத்தை) யடையும் நெறிகளேப் பற்றிக் கவலேயில்லே. ஒவ்வொரு பாதையும் ஒவ்வொரு பண்பை உற்றுச் செல்லும். ஈற்றில் பெறுவது இறை நிலேயே. குறிக்கோள் உண்மையா யிருந்ததால். அவ்வாறுதான் பெருமானுக்கு நடைபெற்றது. ''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனுர்தாம் வருவார்'' என்பது சிவ ஞான சித்திச் சாத்திர நூல். ''யாதோர் தேவர் எனப்படுவார்க்கெல்லாம் மாதேவனல்லால் தேவர் மற்றில்லேயே'' என்பது வாகீச வள்ளலின் தோத்திர நூல் (தேவாரம்) சாத்திர நூல் அறிவின்பால்பட்டது. தோத்திர நூல் அன்பின்பால் பட்டது. அறிவும் அன்பும் ஒன்றுன இந்நிலேப்பாடல் வகை. குறிக் கோளே உணர்த்திப் பயனளிப்பது.

(அடுத்த இதழில் முடியும்)

பெயர்த் தொல்லே!

டென்மார்க் நாட்டின் மொத்த மக்கள் தொகை 25 இலட் சம். இவர்களில் 3 இலட்சத்து 50 ஆயிரம் பேர் 'நெல்சன்' என்றும் 3 இலட்சத்து 20 ஆயிரம் பேர் 'ஜான்சன்' என்றும் 3 இலட்சம் பேர் 'ஹென்சன்' என்றும் தங்கள் பெயர்களே வைத்துக்கொண்டிருக்கிருர்கள். பெயர்க் குழப்பம் அதிகமாக இருப்பதாகக்கூறி டென்மார்க் அரசு அவர்கள் தங்கள் பெயர் களே மாற்றிக்கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுத் துள்ளது.



உங்கள் குரல்...

('உங்கள் குரல்' பகுதிக்கு வாசகர்களிடமிருந்து கடிதங்கள் வரவேற்கப்படுகின்றன. கடிதங்களை உங்கள் குரல், "நகரத்தார் குரல்" 25, வடக்குச் சித்திரை வீதி, மதுரை-625001 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்)

படிப்பிலே படுசுட்டியாய் விளங்குகின்ற நகரத்தார் பிள்ளைகள் நல்ல விதமாய் கல்வி கற்க வேண்டுமென்ற உயரிய நோக்கோடு தாங்கள் தீட்டியுள்ள தலையங்கம் மிக அருமை. பயன் தர விழைகின்றேன்.

இராம. முத்துக்கருப்பன், திருக்கோயிலூர்.

நம் 'நகரத்தார் குரல்' ஜூன் இதழ் கண்டு இன்புற்றேன். கருத்துச் செறிவு நிறைந்திருந்தது குறித்துப் பாராட்டுக்கள். இந்த இதழில் 'புது மாப்பிள்ளை' சிறுகதை பரவாயில்லை. டாக்டர் ஆறு. அழகப்பனாரின் எழுத்துக்கள் மனதினை நெருடின. மற்றபடி நல்ல முயற்சி. வளரட்டும், வாழட்டும் பல்லாண்டு...பல்லாண்டு...

முல்லை காந்தி இராமசாமி, தேவகோட்டை.

விருத்தாசலம் நகரத்தார் சங்கம்

விருத்தாசலம் நகரத்தார் சங்கம் தன் முதலாமாண்டில் கீழ்க்கண்ட பணிகளைச் செய்திருப்பதாக அறிவித்துள்ளது :

ஏழைப் பிள்ளைகளுக்குப் பாட புத்தகங்கள் வாங்கி பைண்டு செய்து கொடுத்தது; மாணவ மாணவியருக்கு தண்ணீர் வசதி செய்து கொடுத்தது; ஆடிக் கிருத்திகை, திருப்பள்ளி எழுச்சி, பிள்ளையார் நோன்பு சமயங்களில் கூட்டு வழிபாடு நடத்தியது; எல்லாக் கிருத்திகையன்றும் பொது அர்ச்சனை செய்தது; பங்குனி உத்திரத்தன்று தண்ணீர்ப் பந்தல் நடத்தியது; காவிரிப்பூம்பட்டின பட்டினத்தடிகள் விழாவிற்குச் சுற்றுலா சென்று வந்தது; சைவப் பெருந்தகை முரு. பழ. இரத்தினம் செட்டியார் அவர்களுக்குச் சிறப்புமிக்க வரவேற்பளித்தது.

❖ ஒருவனுடைய கொள்கையை மற்றொருவன் மீது திணியாதிருப்பதே சகிப்புக்கு அறிகுறியாம்.



கண்டவராயன்பட்டி நா. சி. சொ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களின் பேத்தியும் சிவசுப்பிரமணியம் அவர்களின் புதல்வியுமான செல்வி மீனாட்சிக்கும் பூலாங்குறிச்சி மு. சு. இராமநாதன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சுப்பிரமணியன் *B.E. (M.B.A.)*க்கும் 2—6—1982 அன்று கண்டவராயன்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

❖❖❖❖

மதுரை, விஜயா பிரிண்டர்ஸ் உரிமையாளர் கே. சிவராமன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சொக்கலிங்கத்திற்கும் புதுவயல் ராம.வீர. இராமநாதன் செட்டியார் அவர்களின் பேத்தியும் வீரப்ப செட்டியார் அவர்களின் புதல்வியுமான செல்வி அலமேலுவிற்கும் 10-6-82 அன்று புதுவயலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலையில் பேராசிரியர் திரு. ஜி. செல்வ கணபதியின் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. அதில் பேராசிரியர் திரு. சாலமன் பாப்பையா, திரு. சொ. சொ. மீ. சுந்தரம், டாக்டர் சொல்விளங்கும் பெருமாள், டாக்டர் சக்தி பெருமாள், கவிஞர் கதி. கணேசன், திருமதி சி. எஸ். விசாலாட்சி ஆகியோர் பங்கு பெற்றனர். திரு. சி. எஸ். நாச்சியப்பன் வரவேற்புரை நிகழ்த்த திரு. நாச்சியப்பா இராமநாதன் நன்றி நவின்றார்.

❖❖❖❖

பாகனேரி தெ. நா. சொ. நாச்சியப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் கண்ணப்பனுக்கும் பாகனேரி சுப.ஆறு.காளையப்ப செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி வள்ளியம்மைக்கும் 10-6-82 அன்று பாகனேரியில் திருமணம் சிறப்பாக நடந்தேறியது.

❖❖❖❖

பாகனேரி பழ. நா.சுப. சிங்காரம் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி மீனாட்சி என்ற ராஜேஸ்வரி *B.Sc.*க்கும் பாகனேரி தெ.கரு.அ. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் சோமசுந்தரம் *B.Sc.*க்கும் பாகனேரியில் 10-6-82 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

❖ *தீமையைத் தவிர்ப்பது மட்டும் போதாது. அதை எதிர்ப்பது அவசியம்.*

'முத்தமிழ் மணி' கதி. சுந்தரம் அவர்களின் புதல்வி செல்வி மீனாட்சிக்கும் புதுப்பட்டி ஆறு. மு. ஆறுமுகம் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் முத்தப்பனுக்கும் வலையபட்டியில் 10-6-82 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

❖❖❖❖

அரண்மனை சிறுவயல் சுப. கண்ணப்ப செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் ஐயப்பனுக்கும் நாட்டரசன்கோட்டை சு. ராம. சிதம்பரம் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி விசாலாட்சிக்கும் 13-6-82 அன்று நாட்டரசன்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

❖❖❖❖

கோவில்பட்டி லாயல் டெக்ஸ்டைல் மில்ஸின் ஜெனரல் மானேஜர் கே. ஆர். சேதுராமன் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி லெட்சுமிக்கும் ஆவினிப்பட்டி ஏ. கே. ஏ. எம். சுப்பிரமணியன் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் கருப்பையா B. Sc க்கும் மேலைச் சிவபுரியில் 13-6-82 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

❖❖❖❖

அலவாக்கோட்டை அண. அரு. சித. சம்பத் செட்டியார் அவர்களின் புதல்வி செல்வி வள்ளியம்மை என்ற பத்திரிசாலாவுக்கும் சொக்கலிங்கபுரம் சுப.லெ.ராம. இராமசாமிச் செட்டியார் அவர்களின் புதல்வன் செல்வன் இளங்கோ *B. E.*க்கும் அலவாக்கோட்டையில் 23-6-32 அன்று திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மெய்சிலிர்க்கவைத்த தேரோட்டம்

செட்டிநாட்டினிலே எத்தனையோ தேர்த் திருவிழாக்களை நான் பார்த்திருக்கிறேன்! ஆனால் இவ்வாண்டு நான் இராயவரத்தில் கண்ட தேரோட்டம் போல் வேறெங்கும் பார்த்ததில்லை. அது என்னை மிகவும் வியப்பிலாழ்த்தியது! மெய்சிலிர்க்க வைத்தது!

தேரின் வடத்தைப் பிடித்து இழுத்து வரும்பொழுது, பச்சிளம் குழந்தைகளை சிறு தடுக்குகளில் தேரின் அடியில் படுக்கவைத்து தேர் இரண்டு அல்லது மூன்று அடிகள் வந்ததும் இழுத்து நிறுத்தினார்கள். இப்படியே கிட்டத்தட்ட 26 குழந்தைகளைப் படுக்க வைத்து தேரை இழுத்துப் பின்னர் அதை நிலைக்குக் கொண்டு நிறுத்தினார்கள். குழந்தைகளை ஏன் இப்படி தேருக்கடியில் படுக்கவைத்து, தேரை இழுக்கிறார்கள்? குழந்தைச் செல்வம் இல்லாதிருப்பவர்கள் 'என்னுடைய குழந்தையை தேருக்கடியில் போடுகிறேன்' என்று வேண்டிக்கொண்டால் நிச்சயம் அடுத்த ஆண்டில் அவர்களுக்குக் குழந்தைச் செல்வம் கிடைத்துவிடும் என்ற தெய்வ நம்பிக்கையே அதற்குக் காரணம்! என்னே மாரியம்மனின் அருள்!

— ஆ. சொ. ஆண்டியப்பன்
ஆவினிப்பட்டி

மணி விழா

பாகனேரி சுப. வே. மாணிக்கம் செட்டியார் அவர்களுக்கும் அவர்களது துணைவியார் மா. மீனாட்சி ஆச்சி அவர்களுக்கும் பாகனேரியில் உள்ள அவர்களது இல்லத்தில் 21-6-82 அன்று அறுபதாம் ஆண்டு நிறைவு மணி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மணி விழாவிற்கு நகரத்தார் பெருமக்கள் பெருமளவில் வந்திருந்து சிறப்பித்தனர்.

மணி விழாவையொட்டி காலையில் திருக்களர் திரு. டி. ரத்தின சபாபதி தேசிகர் குழுவினரின் தேவார இன்னிசையும், கோட்டூர் திரு. என். ராஜரத்தினம், திரு. என். வீராச்சாமி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் நடைபெற்றன. மாலையில் பட்டி மண்டபம் நடைபெற்றது. 'இல் வாழ்க்கை இன்பமும் எழிலும் பெற்று விளங்கக் காரணம் கணவனே' என்ற தலைப்பில் டாக்டர் சரஸ்வதி இராமநாதன், செல்வி மா. மணிமேகலை, பாலகவிதை கவிதாராணி, திருமதி இரா. காந்திமதி ஆகியோரும் 'மனைவியே' என்ற தலைப்பில் பேராசிரியர் திரு. சாலமன் பாப்பையா, கவிஞர் திரு. இராகவன் முத்து, பேராசிரியர் திரு. சுப. கதிரேசன், திரு. இராமநாதன் ஆகியோரும் பேசினார்கள். பேராசிரியர் திரு. கண. சிற்சபேசன் நடுவராக இருந்து 'கணவனுக்கும் மனைவிக்கும் அதில் சம பங்கு உண்டு' என்று தீர்ப்புக் கூறினார்.

இரவில் 'வயலின் மேதை' குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள் குழுவினரின் வயலின் இன்னிசைக் கச்சேரியும் சுவாமி திருவீதி உலாக் காட்சியும் நடைபெற்றன.

மணி விழாவிற்கு வந்தவர்களை திரு. மா. தியாகராஜனும் திரு. மா. இராமகிருஷ்ணனும் வரவேற்றார்கள்.

இந்த மணிவிழாவையொட்டி பாகனேரி பெரி. அழ. மு. நாராயணன் செட்டியார் அவர்கள் தொகுத்த மணி விழாவின் முதல் மலரை சிவகங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உ. சுப்பிரமணியம் அவர்கள் வெளியிட வெ. பெரி. பழ.மு. காசிவிஸ்வநாதன் செட்டியார் அவர்கள் பெற்றுக்கொண்டார்கள்.

பத்திரிகை ஆசிரியர் : நீங்க எழுதின கதை நல்லா வெயிட்டாயிருக்கே ?

கதாசிரியர் : ஓ! நல்லாயிருக்கா ?

பத்திரிகை ஆசிரியர் : அதில்லை! இருபது அத்தியாயமும் ஐந்து கிலோ தேறும் போலிருக்கேனு சொல்றேன்.

— சிவல்புரி சிங்காரம்

உ
சிவமயம்
பகச்சால மூர்த்தி ஐயனார் துணை

நாட்டின் நலம் ஓங்க
நகரத்தார் குரல் ஒலிக்க
நல் வாழ்த்துக்கள் !

தஞ்சாவூர்
மெட்டல் ஒர்க்ஸ்

மருத்துவக் கல்லூரிச் சாலை

தஞ்சாவூர்-613007

Phone: 1001

எங்களது சிங்கம் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள் மொத்தமாகவும்
சில்லரையாகவும் விற்பனைக்குக் கிடைக்கும்.
விசேட ஆர்டர்களுக்கு குறித்த நேரத்தில்
செய்து கொடுக்கிறோம்.

ஆசிரியர் சிதம்பரரும் அழகுமிகு சுந்தரரும்
மாசில்லா நகரத்தாரும் மதிப்பாக நடத்துகின்ற
மாதஇதழ் நகரத்தார் மாண்புடையார் குரல்ஒலிக்க
நாதத்தமிழ் தாயை நாங்கள்வேண்டி
வாழ்த்துகிறோம்.

வாழ்த்தரங்கம்

மதுரை மீனாட்சி புத்தக நிலைய அதிபர் திரு. செ. செல்லப்பன் திருமதி முத்தம்மாள் ஆச்சியின் மணி விழாவையொட்டி 27-5-82 அன்று மாலை 6 மணிக்கு மதுரை குஜராத்தி சமாஜத்தில், துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் வாழ்த்தரங்கம் நடைபெற்றது. அதில் மதுரை இராமநாதபுரம் வர்த்தக சங்கத் தலைவர் மீ. தனசேகர பாண்டியன், துணைத் தலைவர் ஜெட்டலால் சோலன்கி, ப. நெடுமாறன் எம்.எல்.ஏ., அரிமா சங்கத் தலைவர் கா. சந்திரசேகரன், மதுரை மீனாட்சி ஆலய அறங்காவலர் குழுத் தலைவர் வி. என். சிதம்பரம் செட்டியார், நிர்வாக அதிகாரி ஆர். அரங்கசாமி, பழ. கருப்பையா, டாக்டர் தமிழண்ணல், எழுத்தாளர் ரகுநாதன், நாவலாசிரியர் தி. ஜானகிராமன், சிறுகதை மன்னன் ஜெயகாந்தன் ஆகியோர் மணி விழாத் தம்பதியரைப் பாராட்டி, வாழ்த்துரை வழங்கினர். பல்வேறு துறைகளைச் சார்ந்த உள்ளூர், வெளியூர் நண்பர்களும், பெண்மணிகளும் விழாவிற்குத் திரளாக வந்திருந்தனர்.

புதுப்பட்டியில் மண்டலாபிஷேகம்

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி புதுப்பட்டியில் உள்ள நகரத்தார் சிவன் கோவிலில் 12—6—82 காலை ஏகாதச ருத்ர ஜெபமும் தாரா ஹோமத்துடனும் மண்டலாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

மண்டலாபிஷேகம் வரை தினசரி கும்பங்கள் வைத்து ஜெபம் செய்து அபிஷேகங்கள் நடைபெற்றன.

மலர் வெளியீட்டு விழா

12—6—82 அன்று மாலை கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. டாக்டர் சுப.அண்ணாமலை அவர்கள் தலைமையில் டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார் அவர்கள் மலரை வெளியிட வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்களும் தேவகோட்டை அ. மெ. அ. லெ. அ. முவீ. முத்துவீரப்ப செட்டியார் அவர்களும் பெற்றுக் கொண்டார்கள். 'கலைமகள்' இராம. நடராஜன் செட்டியார் அவர்கள் தொடக்கவுரையாற்றினார்கள். டாக்டர் தமிழண்ணல் 'முத்தமிழ்மணி' திரு. கதி. சுந்தரம், திரு. பழ. கருப்பையா ஆகியோர் சொற்பெருக்காற்ற 'கலைமகள்' திரு. இராம. நடராஜன் செட்டியார் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

மதுரை-625009, கிருஷ்ணபுரம் 4 ஆவது குறுக்குத் தெரு, டோர்நிர். 20ல் உள்ள எக்ஸ்போ பிரிண்டர்ஸில் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் மதுரை, வடக்குச் சித்திரை வீதி, டோர்நிர். 25லிருந்து வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: வி. என். சிதம்பரம்.